# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-1
Date : 20.08.2024
Case No. : O.S. 59/2021
Nationality : Indian
Name : பன்னீர்செல்வம்
Religion :
Father's/Husband's Name : ரெங்கநாதன்
Age : 71
Village :
Taluk :

வா.சா.1

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் 1ம் பிரதிவாதிக்கு எதற்காக பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்தேன் என்றால் எனது சொத்துக்களை பராமரிப்பதற்காக எழுதிக் கொடுத்தேன். எந்த தேதியில் எழுதிக் கொடுத்தேன் என்றால் 21.08.1996 ம் தேதி எழுதிக் கொடுத்தேன். எனது வழக்குரையில் நான் வெளிநாட்டில் இருந்ததால் எனது சொத்துக்களை பராமரிக்க முடியாததால் 1ம் பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் எனது சொத்துக்களை பராமரிப்பதற்காக பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்தேன். 1ம் பிரதிவாதிக்கும் எனக்கும் இடையே பிரச்சனை ஏதும் உள்ளதா என்றால் எனக்கு தெரியாமல் தாவா சொத்திற்குள் நுழைந்து மரங்களை வெட்டுகிறார்கள்.

2. 1ம் பிரதிவாதி எனது மூத்த சகோதரர் என்றால் சரிதான். எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே குடும்ப சொத்து சம்மந்தமாக பிரச்சனை ஏதும் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி பொது அதிகார ஆவணம் தற்போது நடைமுறையில் உள்ளதா என்றால் இல்லை

நான் ரத்து செய்துவிட்டேன். அது சம்மந்தமாக நான் 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு எதுவும் கொடுத்தேனா என்றால் வாய்மொழியாக தெரிவித்தேன். எழுத்துமூலமாக அறிவிப்பு கொடுக்கவில்லை. நான் பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ரத்து செய்த ஆவணத்தின் அசலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்த பிறகுதான் தாவா சொத்தை நான் சாகுபடி செய்தேனா என்றால் இல்லை. அதற்கு முன்பாகவே நான்தான் விவசாயம் செய்தேன்.

3. நான் தாவா சொத்தினை விவசாயம் செய்ததை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் புல எண் என்னவென்றால் புல எண் 181/9A மற்றும் 181/9B ஆகும். புல எண் 181/9A ல் உடைந்த வீடு மற்றும் புழக்கடை உள்ளது. நான் ஏற்கனவே விவசாயம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் இந்த வழக்கில் கண்ட தாவா சொத்தில் வீடுதான் உள்ளது. வழக்குரையில் கண்ட சங்கதிகள் தெரியாமலேயே நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தெரிந்துதான் தாக்கல் செய்துள்ளேன். நான் என் சகோதரருக்கு எழுதிக் கொடுத்த பொது அதிகார ஆவணம் நடைமுறையில் இருக்கும்போது ஆவணத்தின் மூலமாக எனது சகோதரர் 1ம் பிரதிவாதி அறிவரசன் என்பவருக்கு கிரய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் நான் அதற்கு அதிகாரம் அளிக்கவில்லை.

4. எதிர் வழக்குரையில் அறிவரசு என்பவரிடம் 27.12.2020 ம் தேதி கிரய ஒப்பந்தம் செய்து கொண்டு முன்பணம் ரூபாய் 50,00,000/- பெற்று என்னிடம் கொடுத்தாக 1ம் பிரதிவாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு பணம் எதுவும் என்னிடம் கொடுக்கப்படவில்லை. பொய்யாக சொல்லப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் 09.12.2021ம் தேதி மேற்படி சங்கதிகளை உள்ளடக்கி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால்

சரிதான். எதிர் வழக்குரை தாக்கல் செய்த பிறகு பிரதிவாதிகள் மீது நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்ததால் வேறு நடவடிக்கை எடுக்கவில்லை. மேற்படி அறிவரசு என்பவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் அறிவரசு என்பவரை எனக்கு யார் என்று தெரியாது என்பதாலும் என்னிடம் பணம் எதுவும் கொடுக்கப்படவில்லை என்பதாலும் அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. 27.12.2020 ம் தேதியிட்ட கிரய ஒப்பந்தம் எனக்கு தெரிந்து ஏற்பட்டது என்றாலும் அதற்கான முன்பணத்தை நான் பெற்றுக் கொண்டேன் என்றாலும் அதனால்தான் காவல்துறை மூலமாக நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

5. 27.12.2020 ம் தேதியிலிருந்து தாவா சொத்தின் சுவாதீனம் அறிவரசு என்பவரிடம் இருந்து வருகிறது என்றாலும் என்னிடம் சுவாதீனம் இல்லை என்றாலும் சரியல்ல. கிரய ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு தாவா சொத்தின் மதிப்பு அதிகரித்ததால் சொத்தின் சுவாதீனம் என்னிடம் இருப்பதாக பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் இவ்ழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் அவர்களும் பிரச்சனை செய்ததால் சேர்த்துள்ளேன். தாவா சொத்தில் உள்ள வீட்டில் நான் குடியிருக்கிறேனா என்றால் அது உடைந்தபோன வீடு என்பதால் குடியிருக்க முடியாது. 2,3 பிரதிவாதிகள் மீது நான் புகார் ஏதும் அளித்தேனா என்றால் 1 முதல் 3 பிரதிவாதிகள் திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன். 04.05.2021 ம் தேதி புகார் அளித்தேன். நான் ஒரு முறைதான் புகார் அளித்தேனா என்றால் இந்த சொத்தை பொறுத்து ஒருமுறைதான் புகார் அளித்தேன். காவல் துறையினர் நடவடிக்கை எதுவும் எடுத்தார்களா என்றால் சிவில் பிரச்சனை என்பதால் நீதிமன்றத்திற்கு செல்லுமாறு அறிவுறுத்தினார்கள். தாவா சொத்து எந்த

ஆண்டிலிருந்து எனது சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்றால் 15.09.1999 ம் தேதியிலிருந்து சுவாதீனத்தில் இருந்து வருகிறது. நான் வழக்குரையிலேயே தாவா சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்பதை நான் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல.

6. நான் வெளிநாட்டில் இருந்தபோது எனது மனைவியும் என்னுடன் இருந்தார் என்றால் சரியல்ல. எனது மனைவி இந்தியாவில்தான் இருந்தார். நானும் எனது மனைவியும் தொடர்ச்சியாக வெளிநாட்டில் இருந்ததால் தாவா சொத்தின் சுவாதீனம் ஒருபோதும் என்னிடம் இருந்ததில்லை என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/-N.Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.